# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

## கல்வி மற்றும் கல்வித் துணைப் பதவி ஊழியர்கள்

விண்ணப்பிக்கும் பாடப் பிரிவு / பிரிவுகள் பின்வரும் பிரிவுகளுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் மேலும், பாடப் பிரிவுகள், விசேட குறிப்புகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விடயங்களை தெரிந்தக்கொள்ள ஆங்கிலப் பத்திரிகை விளம்பரத்தை அல்லது பல்கலைக்கழக இணையதளத்தைப் பார்க்கவும்.

### 01. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / தரம் II, விரிவுரையாளர்

**மருத்துவப் பீடம்**

இணை மருத்துவ விஞ்ஞானப் பிரிவு
சிகிச்சையியல் பிரிவு

### 02. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / தரம் II, விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி

**மருத்துவப் பீடம்**

இணை மருத்துவ விஞ்ஞானப் பிரிவு
மருத்துவ சிகிச்சையியல் பிரிவு

**பொறியியல் பீடம்**

மின்னியல், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவு
எந்திரப் பொறியியல் பிரிவு
கடல்சார் பொறியியல் பிரிவு

**தொழில்நுட்ப பீடம்**

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

**முகாமைத்துவ, சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்**

முகாமைத்துவ மற்றும் நிதிப் பிரிவு

**கணனிப் பீடம்**

கணனி விஞ்ஞானப் பிரிவு - இரத்மலானை வளாகம்
கணனிப் பொறியியல் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

**சூரியவெவ தெற்கு வளாகம்**
**செயற்கை சூழலியல் மற்றும் நில அளவியல் பீடம்**

கட்டடக்கலைப் பிரிவு
அளவியல் பிரிவு

### 03. ஆலோசகர் பதவி தரம் II

**பொறியியல் பீடம்**

கணிதப் பிரிவு
எந்திரப் பொறியியல் பிரிவு
கடல்சார் பொறியியல் பிரிவு

**கணனிப் பீடம்**

கணனி பொறியியல் பிரிவு - இரத்மலானை வளாகம்
தகவல் தொழிநுட்பப் பிரிவு - சூரியவெவ வளாகம்

### சம்பள அளவுத்திட்டம்
**கல்வி மற்றும் கல்வி துணைப் பதவியணியினர்**

01. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I
:- U-AC 3 (I) ரூ.91,310 - 7x2,170 – 106,500 p.m.+ (189% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
02. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II
:- U-AC 3 (II) ரூ.79,360 - 11x1,630 – 97,290 p.m. + (189% கல்விசார் கொடுப்பனவு +அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
03. விரிவுரையாளர் பதவி (நிரந்தரமாக்கப்படாத) :-
:- U-AC 3 (III) ரூ.69,580 - 5x1,630 – 77,730 p.m. + (164 % கல்விசார் கொடுப்பனவு +அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
04. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) :-
:- U-AC 3 (IV) ரூ.54,600 - 10x1,335–67,950 p.m. + (144% கல்விசார் கொடுப்பனவு +அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)
05. ஆலோசகர் பதவி தரம் II
:- U-AS 1 (I) ரூ. 48,385 - 19x690 - 61,495 p.m. (அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவு)

**ஏனைய பிரதிபலன்கள் :**
சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II மற்றும் அதற்கு உயர்ந்த பதவிகள் நிமித்தம் 7 வருட சேவைக்குப் பின்னர் ஊதியத்துடன் ஒரு வருட காலத்திற்கு அல்லது சம்பளமில்லாத 2 வருட காலத்திற்கு ஏழு வருடகால விடுமுறை, ஏற்புடைய பதவிகளுக்குறிய கொடுப்பனவுகள் மற்றும் 35% ஆராய்ச்சி கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த மிகை ஊதியம் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்திய சாலையில் சலுகை அடிப்படையிலான சிகிச்சை வசதி மற்றும் ஏனைய சிறப்புரிமைகள்.

### பொது நிபந்தனைகள் :

1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் குறித்தப் பதவிகளுக்கு அல்லது தரங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் தேர்தெடுக்கப்படுவார்கள்.
3. விண்ணப்பதாரிகள் இணையத்தளதிலுள்ள (www.kdu.ac.lk) மாதிரிப் விண்ணப்பப்படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.01.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.
5. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
6. பல்கலைக்கழகங்களில் / நிறுவனங்களில் / அரசாங்கத் திணைக்களங்களில் / நிறுவனங்களில் அல்லது நிமித்த சட்டப்பூர்வ சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.
7. விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு தேவையான அனைத்து தகமைகளையும் விண்ணப்பங்கள் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
8. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொண்டு குறித்த பதவிகளுக்கு அந்த விண்ணப்பப்படிவங்களின் மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும், உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது மாதிரிப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9. தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
10. விண்ணப்பதாரிகள், தமது கற்றல் திறனை தேர்வாளர் குழுவினர் முன்னிலையில் (ஆங்கில மொழியில்) கற்பித்தல் திறனை உறுதி செய்ய வேண்டும். (குறித்த பதவிகளுக்காக).
11. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
12. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், பதவி உயர்வு நடைமுறைகளுக்கும், மற்றும் நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கும் ஏறப விண்ணப்பதாரிகள் தேர்தெடுக்கப்படுவார்கள்.
13. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு முன்னர் தகைமையுடைய பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
14. நிரந்தர பதவியிலுள்ள பதவியினருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
15. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்த நியமனம் மூன்று (03) வருடங்களுக்கு தகுதிகாண் காலமாக இருக்கும்.
16. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 721 இன் பதவி இலக்கம் 03 ல் (ii) அல்லது (iii) இன் கீழ் தமைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பத்தாரிகள் நியமனத்திற்காக கவனத்தில் கொள்ளப்படும் படிமுறை இலக்கம் (i) கீழ் தகைமைகளைப் பூரணப்படுத்தாதவர்களாயின் அல்லது நேர்முகத்தேர்வுக்கு குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரமே அழைக்கப்படுவர்.
17. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / நீதிச் சட்ட சபைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
18. பதவிகளுக்கு ஏற்புடைய பிரிவுகளுக்கும் மற்றும் தகமைகளுக்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையதளத்திலும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையிலும் காணப்படுகின்ற விசேட குறிப்புகளையும் மற்றும் பதவியுடன் தொடர்பான பாடப் பகுதிகள் மற்றும் தகுதிகள் என்பன தொடர்பான திருத்தங்களையும் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

- சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I / II - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.721, 935,
  விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவி - 08/2016, 08/2016 (ii), 08/2016 (iii)
- விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல 07/2018
- ஆலோசகர் பதவி தரம் II - UGC ஆணைக்குழுவின் சுற்றிக்கை இல.725

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390, இலங்கை.

**இறுதி திகதி 2025.01.08**

மேலதிக விபரங்களுக்கு
www.kdu.ac.lk
இணை பார்க்கவும்